# முதன்மைக் கல்வி அலுவலகம் வேலூர்

முக்கிய அறிவிப்பு

## மேல்நிலை இரண்டாமாண்டு பெயர் படியலில் சார்பான தகவல்கள்

மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவர்களின் பெயர் பட்டியல் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திலருந்து பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும்.

பதிவிறக்கம் செய்யப்பட்ட பெயர் பட்டியலில் மாணவர்களின் பெயர் புதிதாக சேர்த்தல், மாணவர்களின் பெயர்கள் நீக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு மட்டுமே அந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேல்நிலை இரண்மாண்டு பெயர் பட்டியலில் மேற்குறிப்பிட்டுள்ள சேர்த்தல், நீக்கம், திருத்தங்கள் பள்ளி அளவில் மேற்கொள்ள இயலாது .

எனவே பெயர் பட்டியலில் சேர்த்தல், நீக்கம், திருத்தங்கள் இருப்பின் அதன் விவரங்களை 15-12-2021 அன்று மாலை 03.00மணிக்கு வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக பி4 பிரிவு எழுத்தரிடன் உடன் ஒப்படைக்குமாறு அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பெயர் பட்டியல் மாணவர்களின் **பெயர் சேர்க்க** கீழ்க்காணும் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

1. மாணவனின் பழைய பள்ளியின் மாற்றுச் சான்றிதழ்
2. மாணவனின் மேல்நிலை முதலாமாண்டு தேர்விற்கு வழங்கப்பட்ட நிரந்தர எண் மற்றும் தேர்வு பதிவு எண் , 50 kb உள்ள புகைப்படம் சிடியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பெயர் பட்டியல் மாணவர்களின் **பெயர் நீக்கம்** செய்ய கீழ்க்காணும் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

1. மாணவனுக்கு வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழ்
2. மாணவனின் இறப்பு சான்றிதழ்
3. பெயர் பட்டியலின் நகலில் காரணம் குறிப்பிட்டு ஒப்படைக்கப்பட வேண்டும்.

பெயர் பட்டியல் மாணவர்களின் **பெயர் திருத்தம்** செய்ய கீழ்க்காணும் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
2. மேல்நிலை முதலாமாண்டு தற்காலிக மதிப்பெண் பட்டியல்
3. திருத்தங்கள் மேற்கொள்ள உரிய மற்ற ஆவணங்கள்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர் அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்
மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

14/12/21

14/12/21